முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1668

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.04.2024,** செவ்வாய்க்கிழமை

1. ஞானிகள் பலம்கொண்ட அரங்கனே
ஞானசித்தி கொண்ட தேசிகனே
கனிவேலவன் என் அவதாரமாய்
கருணை வடிவாய் கலியில் அவதரித்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 10ம் நாள், 23.04.2024, செவ்வாய்க்கிழமை)
வரங்களாக அரங்கன் உமக்கு நித்தம்நித்தம்
வல்லமை ஊட்டி ஆறுமுகன்யான் காத்துவர
3. வருகவே அரங்கன் உன்தர்மத்தின் வழி
வையகத்தில் உலகோர் ஞானம்பெறுவர்
அறமாக அரங்கன் நீதந்த உபதேசத்தின் வழி
அகிலத்தார் எல்லாம் ஒன்றுகூடி இணைந்து
4. இணைந்துமே இந்த கலியுகத்தில்
இணையிலா அரங்கன் சபைவழியே
எல்லோரும் ஞானிகளாக மாற்றம் பெறுவர்
மாற்றம் தரவந்த மாதவசி நீ
5. மக்களை காக்க வந்த மகாயோகி நீ
ஆற்றல்பட உன் நாமஜெபத்தை சொல்லும்
அனைவருக்கும் ஆறுமுகன்என் ஆசிகிட்டும்
மாற்றம் கருதி அரங்கன்உன் குடிலுக்கு வந்து
6. மாதர்மத்தில் பொருளுதவி செய்பவருக்கும்
செய்துகொண்டு உடல்உழைப்பு தொண்டு
சிறப்பான சேவையாற்றும் அன்பர்கட்கும்
மறுப்பின்றி அரங்கன் உன்ஆசியோடு
7. மண்ணுலகில் முருகப்பெருமான் என்
அருளும் தயவும் பரிபூரணமாய் உண்டுஉண்டு
உண்டான உயர்ஞானி அரங்கன் நீ
உலகத்தில் உன் வழிகாட்டலில்தான்

8. கொண்டதொரு கலியுகம் தானும்
குறையில்லா ஞானயுகமாக மாற்றம்கண்டு
தொண்டர்கள் வழி ஞானலோகமாகவும்
தேசிகன் கருணையோடு இந்தகலியுகத்தில்

9. கலியுகத்தில் மாற்றம் ஞானயுகமாக
ஞான ஆட்சி காலமாக
மக்கள் விரும்புகின்ற ஞானிகள் ஆற்றல் மிகுந்த
ஞானசித்தர் காலமுமாக மாறுதல்காணும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–